KARUVI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED
LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

வலு

ஏப்ரல் - ஜூன் 2015 காலாண்டிதழ் இதழ் - 6

ரூபா 80
இறுவெட்டுடன்
ரூபா 100

நீங்கள் செய்யும் எல்லாவற்றையும்
நானும் செய்வேன்...
– ஜெசிக்கா

PUPLIC LIBRARY
JAFFNA

மாற்று
வலுவுடையோரின்
எதிர்காலம்

வெளியீடு
கருவி
மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையம்

ஆடைகளில் கறைகளை அகற்றி
தனித்துவம் உள்ளவர்களாக உங்களைத் துலங்கச் செய்ய
New
VTM
With New Fragrance
சலவைத்தூள்
தோல் அலர்ஜிகளில் இருந்து
முழுமையாகப் பாதுகாப்பு தருகின்றது
தொடர்புகளுக்கு : 0773400472

PCP
nothern
PC PARK
BEST WAY BUY
BEST COMPUTER
0777 570 124
HOTLINE
hp
invent
உலகத் தரம்
உங்கள் கைகளில்
கணனி உலகின்
நம்பகரமான
சேவையில்
10
வருடங்களுக்கு
மேலாக
யாழ் மண்ணில்
TOWN SHOW ROOM
10-14, STANLY ROAD
JAFFNA
021 222 2050
TECHNICAL DIVISION
288, PALALY ROAD.
KANTHARMADAM, JAFFNA.
021 222 9581
MAIN SHOW ROOM
269E, PALALY ROAD,
KANTHARMADAM, JAFFNA
021 222 0388

PUPLIC LIBRARY
JAFFNA

இதழ் 06

வலு

ஏப்ரல் - ஜுலை 2015

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களையும் ஆக்கங்களையும் தாங்கி வெளிவரும் காலாண்டு சஞ்சிகை

பிரதம ஆசிரியர்
திரு.க.தர்மசேகரம்

ஆசிரியர் குழு
திரு.நா.கீதாகிருஷ்ணன்
திரு.செ.பிறிந்தாபரன்
திரு.இ.தனஞ்சயன்
திரு.யோ.சுதாகரன்
திரு.வ.சசிகுமார்
செல்வி ப.சசிகலா

வெளியீடு
கருவி
மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்,
இல.1166/15, அருளம்பலம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
021 205 4224

Email:
karuvi.org@gmail.com
web: karuvi.org

உள்ளே

1. மருந்தாகும் கலைகள் 02
2. விழிப்புலன் மாற்றாற்றல் உடையோரின் வாழ்வில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு 03
3. வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் 05
4. சிறப்புச் சிகிச்சையால் மீண்டும் நடக்கத் துவங்கியுள்ள டெரிக் 08
5. செய்திச்சாரளம் 10
6. தசரசம் 12
7. சிறுகதை - ஊன்றுகோல் 21
8. மாற்றுவலுவுடையோர் எதிர்காலம் 24
9. முற்றத்து மல்லிகை 26
10. வலுவிடம் கேளுங்கள் 28
11. எழுதுங்கள் வெல்லுங்கள் 29
12. எண்ணக் கிண்ணம் 31
13. வாங்க கதைக்கலாம் 32

தொடர்புகளுக்கு:
நா.கீதாகிருஷ்ணன் - 0766385563
ஆ.பரமேஸ்வரன் - 0779791366

மருந்தாகும் கலைகள்

மனித குலத்தின் வாழ்வியலோடு கலைகள் பின்ணிப் பிணைந்து காணப்படுகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை மனிதப் படி நிலையின் தடங்கலில் கலைகள் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றன. மனிதன் மனிதனாக வாழ்வதற்கும் உண்மையான மகிழ்ச்சியையும், திருப்தியையும் அவன் அனுபவிப்பதற்கும் கலைகள் அடிப்படையாகின்றன.

மனித திறனை உலகிற்கு வெளிப்படுத்துகின்ற ஊடகங்களாக பல கலைகள் விளங்கி வருவது நிதர்சனமானது. இயல், இசை, நாடகம் என்கின்ற பிரதான வகையீட்டிற்குள் இருக்கும் கலை அம்சங்களை ஒவ்வொரு மனிதனும் பயனுள்ள வகையில் பயன்படுத்தும் போது மனிதப்படி மலர்ச்சிக்கு அது ஆரோக்கியமாக அமைகின்றது.

மனித சமூகத்தில் இளையோடிப் போயிருக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கும் அவற்றிற்கான தீர்வு நிலைகளை நோக்கி நகர்வதற்கும் கலைகள் வழங்கி வருகின்ற பங்களிப்பு அளப்பரியது. மனிதர்களது உளச் சமநிலையைப் பேணுகின்ற சிறப்பான பொறி முறையாக கலைகள் இருப்பதை வாழ்வியல் அனுபவத்தின் ஊடாக நாம் கண்டு உணர முடியும்.

வலு இழப்புடன் கூடிய நபர்களின் பிரச்சினைகளையும், உணர்வுகளையும் காவக் கூடிய சிறந்த கருவிகளாக கலைகளை நாம் காண வேண்டும். கலைத்துறை சார்ந்த பங்களிப்புக்களை வழங்கக் கூடிய விருப்பமும். ஆற்றலும் உள்ளவர்களாக வலு இழப்புடன் கூடிய நபர்கள் இருக்கின்ற போது அது அவர்களுக்கும் சமூகத்திற்கும் சிறந்த மருந்தாக அமையும்.

பிரதம ஆசிரியர்
திரு.க.தர்மசேகரம்

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களே!

வலு என்ற இச் சஞ்சிகை உங்களுக்கானதே. எனவே உங்களுக்குள் புதைந்து கிடக்கும் திறமைகளை இச் சஞ்சிகை மூலமாக வெளிக் கொணருங்கள். மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான கேள்விகள் மற்றும் உங்களுக்கு இருக்கும் சந்தேகங் களை வலுவிடம் கேளுங்கள் பகுதிக்கு எழுதி அனுப்புங்கள்.

விழிப்புலன் மாற்றாற்றல் உடையோரின் வாழ்வில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு

சி.பிரதீபன்

உலகில் வாழும் அனைவரும் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகவும், பூர்த்திசெய்து கொள்வதற்காகவும் தொழில்நுட்பம் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக இன்று வளர்ச்சியடைந்து வருகின்றது. அதில் பிரதான இடத்தை வகிக்கின்ற கணினியும் அதனை சார்ந்த இலத்திரனியல் சாதனங்களும் விழிப்புலன் மாற்றாற்றல் உடையோரின் வாழ்வில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களை பார்ப்போம்.

கணினி என்பது குறித்து கட்டளையின் படி செயற்படத்தக்கதும் தரவுகளை கட்டளைகளாக மாற்றக் கூடியதும் சேமிப்புப் திறன் உடையதும் பின்னர் அவற்றை மீள வழங்கக் கூடியதுமான ஓர் இலத்திரனியல் சாதனமே ஆகும். இது வன்பொருள், மென்பொருள் உயிர்ப்பொருள் (மனிதன்) ஆகியவற்றின் கூட்டு எனவும் கூறலாம்.

கணினியையும் அதன் பாவனையாளரையும் (user) இணைக்கும் ஒரு ஊடகமாகவே மென்பொருட்கள் (Software) தேவைப்பட்டன.

இவைகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரிக்க புதிய பல மென்பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இவை அனைவருடைய பாவனைக்கும் உகந்ததாகவும் இலகுவான முறையில் கையாளத்தக்கதாகவும் வெளிவந்துள்ளன. அனைவரும் பாவிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் உருவாக்கப்படும் மென்பொருட்களில் சில,விழிப்புலன் மாற்றாற்றல் உடையோருக்கும் எற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உருவாக்கப்பட்டவை நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

திரைப்படிப்பான் (Screen Reader)

இம்மென்பொருள் கணினியை பாவிக்கும் போது அதன் ஒவ்வொரு விசையினதும் செயற்பாட்டுக்கு ஏற்ப ஒலியின் உதவியுடன் தெளிவு படுத்திக்கொண்டிருக்கும் இதன்மூலம் தமது செயற்பாட்டினை அறிந்து செயற்பட முடியும். திரைப்படிப்பானாக பயன்படும் மென்பொருட்களாவன.

01.HAL

இவை பொதுவாக எல்லா வகையான Windows இற்கும் ஏற்றவகையில் உருவாக்கப்பட்டுள்ளது, ஹல்மென்பொருட்கள் தனித்து எழுத்துக்களை மாத்திரமின்றி Windows dialogs, icons, buttons, menus என்பவற்றை மிகவும் தெளிவாக தெரியப்படுத்தும்

02. JAWS

உலகளாவிய ரீதியில் பிரபலமடைந்து காணப்படுவதும் அத்துடன் பாவனையில் அதிகமாக உள்ளதும் இதுவேயாகும். இதுபொதுவானதும், அதிதிறன் மிக்க பிரத்தியேகமானதும் என இரு வகைப்படும். அத்துடன் பயிற்சி கையேடும் இணைக்கப்பட்டிருக்கும். அத்துடன் கல்வி சம்பந்தமானதும் தொழில் சார்ந்ததுமான தகவல்களை

இது தன்னகத்தே கொண்டள்ளது.

03. NVDA

இம்மென்பொருள் Jaws மென்பொருள் போன்று அல்லது எல்லோராலும் இணையத்தளத்திலிருந்து பதிவு இறக்கம் செய்து பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. அத்துடன் இம்மென்பொருளில் தமிழ் மொழி இணைக்கப்பட்டுள்ளதால் இணையத்தளங்களில் தமிழில் வெளியாகும் செய்திகளை வாசித்து அறியக்கூடியாதாக இருப்பது இம்மென்பொருளின் விசேட தன்மையாகும்.

குறிப்பு - கணினியில் NHM Writer என்னும் மென்பொருளை நிறுவுவதன் மூலம் Ms word இல் தமிழில் தட்டச்சு செய்பவற்றை Nvda உதவியுடன் வ்ாசித்து நாமே திருத்தங்களை கணினியில் நிறுவுவதன் மூலம் Unicode அல்லாத எழுத்து வடிவத்தினை Unicode வடிவத்திற்கோ அல்லது Unicode வடிவத்திலிருந்து Unicode அல்லாத எழுத்து வடிவத்திற்கோ மாற்ற முடியும்.

04. Out Spoken 9.0 for Macintosh

Windows இயங்குதளம் தவிர்ந்த Macintosh இயங்குதளம் உடைய கணினிகளுக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் அகராதி மற்றும் வரைவுகளுக்கான உச்சரிப்புக்கள் என்பனவும் மவுஸ் அழுத்தல் அசைவு (darg and drop) செயற்பாடுகளையும் இது மிகத் தெளிவாக எடுத்துக் கூறும்.

05. Virgo 4

இவ்மென்பொருட்கள் Windows ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருட்கள் பார்வை சிறிது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. தெரியப்படுத்தும் பகுதிகள் மிகவும் உருப்பெரிதாக காட்டும் எனவே அப்பகுதியை அவர்களால் அறிந்து கொள்ள முடியும். இதில் எந்தவித ஒலிசமிக்ஞை அமைப்பும் அற்றதாகக் காணப்படுகின்றது.

06. Windows - Eyes

இம்மென் பொருட்கள் Windows இல் ஒரு இணைப்பாகவே உள்ளது. எல்லா வகையான Windows பொருத்தி செயற்படக் கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது. இலகுவில் புரிந்துகொள்ளும் தன்மையுடையது.

(தொடரும்)

அன்பார்ந்த வாசகர்களே!

மாற்றுத் திறனாளிகள் தொடர்பாகவோ அல்லது மாற்றுத் திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்தக்கூடிய வகையில் அல்லது மாற்றுத் திறனாளிகளுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடியனவாக ஆக்கங்களை உங்களிடம் எதிர்பார்க்கின்றோம். எனவே உங்கள் ஆக்கங்களை கவிதையாகவோ அல்லது சிறுகதையாகவோ அல்லது கட்டுரையாகவோ அல்லது செய்தித் துணுக்குகளாகவோ எமக்கு எழுதி அனுப்புங்கள் தரமான உங்களது ஆக்கங்கள் தொடர்ந்து வரும் வலுவில் இடம்பெறும் என்பதை தெரிவித்து நிற்கின்றோம்

வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

விமானம் ஓட்டுவது மட்டுமல்ல விமானம் ஓட்டிகளுக்கு பயிற்றுவிப்பாளர் ஆகவேண்டும் என்கிறார் ஜெசிகா!

இதிலென்ன புதுமை இருக்கிறது. இன்று பெண்கள் எவ்வளவோ சாதிக்கிறார்கள். விமானம் செலுத்துவதோ, பயிற்றுவிப்பாளராக வருவதோ பெண்களைப் பொறுத்தவரை இன்று பெரிய சாதனை அல்ல என்கிறீர்களா?

ஆனால் ஜெசிகாவைப் பொறுத்தவரை இது பெரிய சாதனை தான். ஜெசிகா பிறவியிலேயே இரண்டு கைகளையும் இழந்தவர். பொதுவாக ஊனமாகப் பிறந்தவர்கள் விதியை நொந்தபடி இருக்கும் உறுப்புகளைக் கொண்டு தன் அன்றாட தேவைகளை செய்துகொண்டு வாழ்ந்து விடுவார்கள். ஆனால் ஜெசிக்கா தன்னம்பிக்கை மிகுந்த பெண். தன் செயல்களால், திறமையால் உலகை தன்பக்கம் ஆச்சரிய விழிகொண்டு பார்க்க வைத்திருக்கின்றார்.

அமெரிக்கா அரிசோனா மாநிலத்தைச் சேர்ந்தவர் ஜெசிக்கா ஹொக்ஸ் (31 வயது) பிறப்பிலேயே இரண்டு கைகாளையும் இழந்தவர். ஜெசிகாவின் நிலை கண்டு பெற்றோர்கள் மனதளவில் வருந்தினாலும் ஜெசிகாவிடம் எதையும் காட்டிக்கொள்வதும் இல்லை, ஜெசிகாவை துவண்டுபோக விடுவதும் இல்லை. அதுதான் ஜெசிகாவின் பலமாக மாறியது.

நீங்கள் செய்யும் எல்லாவற்றையும் நானும் செய்வேன்...

ஜெசிகா சிறுவயது முதல் தன்னுடைய அனைத்து வேலைகளையும் தானே செய்யப் பழக்கப்பட்டவர். காலினாலேயே எழுதுவது, போன் பேசுவது, பல் துலக்குவது என எல்லாவற்றையும்

செய்யப் பழகிக்கொண்டார். கையால் எழுதுபவர்களை விட வேகமாக எழுதும் திறமை கொண்டவர்.

தன்னுடைய காரை தானே ஓட்டும் ஜெசிகா அதற்கான அனுமதிப் பத்திரத்தையும் பெற்றுள்ளார். கராத்தேயில் கறுப்புப் பட்டி பெற்றவர். இதுதவிர நடனம், உளவியல் இளமாணிப் பட்டம் என எல்லாவற்றையும் கற்றுத் தேர்ந்தார். உலகிலேயே காலினால் பிளைட் ஓட்டும் ஒருவர் என்றால் அது ஜெசிகா தான். அதுமட்டுமல்லாமல் விமானம் ஓட்டுவதற்கான உரிமத்தையும் பெற்றுவிட்டார்.

இதுபற்றி ஜெசிகா கூறுகையில்;

என்னை மற்றவர்கள் அனுதாபக் கண்கொண்டு பார்ப்பதை என்னால் ஏற்க முடியாது. என்னையும் சாதாரண பெண்ணாக மதித்து என்னுடன் சேர்ந்து வேலை பார்ப்பவர்களைத்தான் எனக்குப் பிடிக்கும். அதுதான் எனக்கு சந்தோசம் தருகிறது. நானே நம்பாத பலவிடயங்களை என்னால் செய்ய முடிந்துள்ளது. புதிய விடயங்களைக் கண்டால் அதை எப்படியாவது நானும் கற்றுக்கொள்ள வேண்டும் என நினைப்பேன். எத்தனை கஷ்டங்கள் இருந்தாலும் நாட்கள் கடந்தாலும் அதைக் கற்றுக்கொண்டு கற்றுக் கொடுப்பவர்களைவிட வேகமாகச் செய்யப் பழகிக் கொள்வேன்.

இப்போதைக்கு என்னால் முடியாது என்று நினைப்பது மலை ஏறுவது. தலைமுடியை சீவிக் கொள்வது இப்படியான சில விஷயங்கள் தான். அவற்றையும் வெகுவிரைவில் பழகிக் கொள்வேன்.

நான் பிறவியிலேயே குறைபாடுடன் பிறந்ததால் என் பெற்றோர் படும் கஷ்டங்கள் எனக்குப் புரிகின்றது. அவர்கள் எந்தக் கஷ்டத்தையும் என்னிடம் காட்டிக்கொள்ளமாட்டார்கள். நான் என்ன செய்ய நினைத்தாலும் அதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்குகின்றனர். கைகளற்ற என் திறமைகளை கட்டிப்போட என் பெற்றோர்



ஒருபோதும் நினைத்ததில்லை. நானே எல்லா வற்றையும் சுயமாகச் செய்துகொள்ள விரும்பி னேன். அதற்கு என் பெற்றோர் மறுப்பின்றி ஒத் துழைத்தனர்.

என்னைப் பார்க்கும் ஒவ்வொருவரும் என் திற மைகளைப் பாராட்டாமல் நீ அதை செய்ய வில்லை இதை செய்யவில்லை என கேள்வி கேட்கின்றனர். அவர்களுக்கு நான் சொல்லும் ஒரே பதில் நீங்கள் சொல்லும் எல்லாவற்றை யும் நான் செய்வேன் என்பது தான்.

எல்லாவற்றையும் செய்தாலும் மற்றவர்களைப் போன்று விமானம் ஓட்டவேண்டும் என்பது தான் என்னுடைய கனவாக இருந்த்தது. வெளி யில் சென்று வானத்தில் பறக்கும் பறவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவற்றைப்போல் நானும் ஒரு நாள் வானத்திற் பறப்பேன் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. நான் எப்படியும் இதை செய்யவேண்டும் என முடிவெடுத்தேன். என் கனவும் நனவானது. யுத்த விமான பைலட் ஒருவரிடம் என் கனவைப்பற்றிக் கூறினேன். அவரும் உதவுவதாக ஒப்புக்கொண்டார்.

பிளைட் பெலன்ஸ் செய்வது பற்றிப் பயிற்சி கொடுத்தார். சாதாரணமாக ஒருவருக்கு மூன்று அல்லது ஆறு மாதத்தில் இந்தப் பயிற்சியை முடிக்க முடியும். என்னால் இது சற்றுக் கடின மாகவே இருந்தது. இந்தப் பயிற்சியை மேற் கொள்ள எனக்கு மூன்று வருடங்கள் எடுத்தது. மூன்று வருட உழைப்பின் பயனாக விமானம் ஓட்டக் கற்றுக்கொண்டேன்.

மூன்றுபேர் கொண்ட குழுவினரின் முன்னால் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் (இலகுரக விமா னம்) விமானம் ஓட்டுவதற்கான அனுமதிப் பத் திரம் கொடுக்கப்பட்டது. இப்போது நான் ஒரு விமானி. இதோடு என் கனவு நின்றுவிடவில்லை. என்னைப்போன்ற எத்தனயோ பேர் இருக்கின் றார்கள். அவர்களுக்கு ஒரு பயிற்றுவிப்பாள ராக வரவேண்டும் என்பதனை இலட்சியமாக ஏற்றுக்கொண்டுள்ளேன்.

நான் பிறந்ததும் இப்படித்தான்; வளர்ந்ததும் இப்படித்தான். ஆகவே இதற்காகக் கவலைப் படுவதில் எந்த பயனும் இல்லை. கவலைப் படு வதால் எனக்குக் கை கிடைக்கப்போவது இல்லை. ஆகவே கவலைப்படுவதை விட என்னைப் போன்று கை கால் இழந்தவர்களுக்கு விமானம் ஓட்டுவதைப் பயிற்றுவித்து அவர்களையும் இந்தத் துறையில் இணைப்பதுவே எனது நோக் கம் என்கிறார் இந்தத் தன்னம்பிக்கைப் பெண் மணி.

நன்றி

ஜீ.வி.எஸ்

PUPLIC LIBRARY
JAFFNA

(27.08.2014 அழகி)

* உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக்கொடுத்துத் தேர்வு வைப்பது இல்லை. தேர்வு வைத்த பிறகே பாடம் கற்பிக்கப்படுகிறது.
* கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்.
* ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.
* மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகியிருக்கும்.
* சலித்துக் கொள்பவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கிறான். சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலும் உள்ள வாய்ப்பினைப் பார்க்கிறான்.

சிறப்புச் சிகிச்சையால் மீண்டும் நடக்கத் துவங்கியுள்ள டெரிக்

முதுகுத் தண்டுவடத்தில் ஏற்பட்ட மோசமான காயம் காரணமாக மார்புக்குக் கீழே செயலற்று இருந்த ஒருவர் மீண்டும் எழுந்து நடக்க முடிந்திருக்கும் செயலானது மருத்துவ உலகில் மிகப்பெரிய அதிசயமாக வர்ணிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்டவரின் நாசித் துவாரத்தில் இருக்கும் செல்களை எடுத்து அவரது பாதிக்கப்பட்ட முதுகுத் தண்டுவடப் பகுதியில் செலுத்தி சிகிச்சை அளித்ததன் மூலம் அவரது முதுகுத் தண்டுவடம் மீண்டும் செயற்படத் தொடங்கியிருக்கிறது. அதன் காரணமாக அவர் மீண்டும் எழுந்து நடக்க ஆரம்பித்திருக்கின்றார்.

2010 ஆம் ஆண்டு நாற்பது வயதான டெரிக் பிடிகா என்பவர் மீது மோசமான கத்திக் குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் அவரது முதுகுத் தண்டுவடத்தில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இருந்த தண்டுவட நரம்புகள் பெருமளவில் அறுந்துபோயின. அதன் விளைவாக அவரது உடலின் நெஞ்சுப் பகுதிக்குக் கீழே செயலற்றுப்போனது.

அறுந்துபோன முதுகுத் தண்டுவட நரம்புகளை மீண்டும் உருவாக்குவதற்கு போலந்தில் இருக்கும் அறுவைச்சிகிச்சை மருத்துவர்களும் லண்டனில் இருக்கும் அறிவியலாளர்களும் சேர்ந்து புதிய சிகிச்சை முறையை உருவாக்கினார்கள். அதாவது மனிதனின் நாசித்துவாரத்தின் இரு புறத்திலும் ஓசிஇஎஸ் என்று ஆங்கிலத்தில் சுருக்கமாக அழைக்கப்படும் ஒருவித பிரத்தியேக செல்களை உற்பத்தி செய்யும் நுகர்வுச் செல் குருத்துத் தொகுதிகள் இருக்கும். இந்தக் குறிப்பிட்ட ஓசிஇஎஸ் செல்கள் தான் மனிதனின் வாசனை அறியும் செயலுக்குக் காரணமானவை.

இந்தக் குறிப்பிட்ட ஓசிஇஎஸ் செல்கள் நாசித் துவாரப் பாதையை அமைக்கும் செல்களாக நாசித்துவாரம் எங்கும் பாசிபோலப் படிந்திருக்கும். நாசித்துவாரத்தில் இருக்கும் நுண்ணிய நரம்பு நார்களை நாள்தோறும் புதிப்பிக்கும் வேலையை இந்த ஓசிஇஎஸ் செல்கள்தான் செய்கின்றன. எனவே இந்த நுகர்வுச் செல் குருத்துத் தொகுதிகள் தொடர்ந்து நரம்புசெல்களை உற்பத்தி செய்யும் தன்மையினை இயற்கையிலேயே கொண்டிருக்கின்றன.

இந்த சிகிச்சையின் முதல்கட்டமாக பாதிக்கப் பட்டவரின் நாசித்துவாரத்தின் இரு பக்கங்க

ளிலும் இருக்கும் இரண்டு நுகர்ச்வுச்செல் குருத்துத் தொகுதிகளில் ஒன்றை மருத்துவர்கள் வெட்டி எடுத்து, அதைக்கொண்டு செயற்கை முறையில் சோதனைச்சாலையில் வைத்து ஒஇசிஎஸ் செல்களை மருத்துவ விஞ்ஞானிகள் வளர்த்தனர்.

இரண்டு வாரங்கள் கழித்து, இப்படி சோதனைச்சாவடியில் வைத்து வளர்த்த ஒஇசிஎஸ் செல்களை நுண்ணிய ஊசிமூலம் பாதிக்கப்பட்ட முதுகுத்தண்டுவடப்பகுதிக்குள் மருத்துவர்கள் செலுத்தினார்கள். முதுகுத்தண்டுவடத்தில் காயம் பட்ட இடத்திற்கு கீழேயும் மேலேயும் இப்படி ஊசி மூலம் ஓஇசிஎஸ் செல்கள் செலுத்தப்பட்டன. சுமார் நூறு முறை மிக நுண்ணிய ஊசிகள் மூலம் இந்த செல்கள் அங்கே செலுத்தி பதியப்பட்டன.

இதன் அடுத்தகட்டமாக பாதிக்கப்பட்டவரின் கணுக்காலில் இருந்து நான்கு தொகுதி நரம்புத்திசுக்கள் எடுக்கப்பட்டு அவை முதுகுத்தண்டுவடத்தின் நரம்புத்தொகுதி அறுபட்டஇடத்தில் பதியப்பட்டது.

இவ்வாறு பதியம் முறையில் முதுகுத்தண்டுவடம் புதுப்பிக்கப்பட்டது.

இதன் விளைவாக முதுகுத்தண்டுவடத்தின் அறுபட்டிருந்த நரம்புத்தொகுதி கொஞ்சம் கொஞ்சமாக மீண்டும் உருவானதாக மருத்துவ விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள். “சோதனைச்சாலையில் வளர்த்து முதுகுத்தண்டுவடத்தில் பதியப்பட்ட ஒஇசிஎஸ் செல்களும் கணுக்காலில் இருந்து எடுக்கப்பட்ட நரம்புத்தொகுதியும் இணைந்து செயற்பட்டதன் விளைவாக, கத்திக்குத்தில் அறுபட்டிருந்த முதுகுத்தண்டுவட நரம்பு மண்டலம் மீண்டும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு மூளையிலிருந்து அனுப்பப்படும் உத்தரவுகள் முதுகுத்தண்டு வடம் முழுமைக்கும் சென்று, பாதிக்கப்பட்டவரின் உடலின் எல்லா பகுதியும் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டும் செயற்படச் செய்திருக்கிறது” என்பது மருத்துவ விஞ்ஞானிகளின் கருத்து.

இதேவேளை தனக்கு இது ஒரு மறுபிறவி என்கிறார் டெரிக் பிடிகா

தற்போது டெரிக் பிடிகாவால் கைத்தடி உதவியுடன் நடக்க முடிகிறது. தான் மீண்டும் நடக்க முடிந்திருக்கும் செயல் தனக்கு ஒரு மறுபிறவி எடுத்ததைப்போன்ற அனுபவம் என்கிறார் அவர்.

அவருக்கு சிகிச்சையளித்த லண்டன் மருத்துவ நிபுணர் குழுவுக்கு தலைமை தாங்கிய பேராசிரியர் ஜியாப் ரெய்ஸ்மென் இந்த மருத்துவ முடிவு தமக்கு எல்லையில்லா மகிழ்ச்சியை கொடுத்திருப்பதாக சொல்கிறார். பாதிக்கப்பட்டவரால் மீண்டும் நடக்க முடிந்திருப்பது தன் பார்வையில் நிலவில் மனிதன் முதன்முதலில் காலடி தடம் பதித்ததைவிட சிறப்பான செயல் என்று கூறும் பேராசிரியர் ஜியாப், இது ஒரு மிகப்பெரிய சாதனை என்று தெரிவித்தார்.

இந்த வெற்றி அளித்திருக்கும் உற்சாகத்தில் இதன் அடுத்தகட்டமாக முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மேலும் பத்துபேருக்கு இதே மாதிரியான சிகிச்சையை அளிக்க துவங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு கிடைக்கவிருக்கும் பலாபலன்கள், அவர்களுக்கு மட்டுமல்ல, உலக அளவில் முதுகுத்தண்டுவட பாதிப்பால் செயலிழக்க நேரும் லட்சக்கணக்கானவர்களுக்கும்புதியவாழ்க்கையை ஏற்படுத்தும் என்று இந்த மருத்துவ ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இவ்வாறான நம்பிக்கைகளுக்கூடாக நாம் நம் வாழ்வை முன்னகர்த்திச் செல்ல முடிந்தவரை முயற்சியோடு செயற்படுவோமாக.

எழுத்து
தமிழ்க்கணியன்
ஆதாரம் - BBC Tamil

செய்திச் சாளரம்

மெக்சிகன் உச்ச நீதிமன்றில் பார்வையற்ற நீதிபதி கடமை

கடுமையாக உழைத்து நீதிபதியாகும் தனது இலட்சியத்தை அடைந்ததன் மூலம் ரிச்சட் பெர்ன்ஸ்டீன் என்பவர் சாதனை படைத்துள்ளார். 41 வயதாகும் ரிச்சட் 01-01-2015 அன்று மெக்சிகன் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

பிறக்கும் போதே பார்வையற்றவராகப் பிறந்த இவர் இந்த உயர் நிலையை அடைய கடுமையாக முயற்சித்து வந்துள்ளார். பத்து வழக்குகளை தனது உதவியாளர் மூலம் வாசித்து அந்தந்த வழக்குகளின் முக்கிய சட்ட நுணுக்கங்களை சாதாரணமாகச் சொல்லி அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளார்.

பெரும் சாதனைகள் கொண்ட இவரது பின்புலமே நீதிபதிகளுக்கான தேர்வில் இவரை வெற்றிபெறச்செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.





பிரெய்லி பிரிண்டர்

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த 13 வயது மாணவன் ஒருவன் இளம் வயதில் தொழிலதிபராகி உள்ளான். அமெரிக்காவில் கலிபோர்னியாவைச் சேர்ந்த 13 வயதுச் சிறுவன் சுபம் பானர்ஜி 8 ஆம் வகுப்புப் படித்து வருகின்றான். இவனது பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடந்தது. அதில் வைப்பதற்காக கண்பார்வையற்றவர்கள் பயன்படுத்தும் பிரெயிலி பிரிண்டரை உருவாக்கினான். தற்போது உள்ள பிரெயிலி பிரிண்டர் 9 கிலோவுக்கும் அதிகமான எடை உள்ளது. ஆனால் சுபம் பானர்ஜி தயாரித்த பிரிண்டர் மிகக் குறைந்த எடை கொண்டது.

மேலும் விலையோ மிகக் குறைவு. அதாவது ரூபா 15,000 மட்டுமே. இப் பிரிண்டர் பாவனைக்கு வரும் பட்சத்தில் அதனால் பலர் பயன் அடைவார்கள் என்பது திண்ணம்.

விசேட தேவைக்குட்பட்டோருக்கு விசேட சிகிச்சை நிலையம்

போரினால் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் சிவில் சமூகத்தினர் மற்றும் மன, உள வளர்ச்சி பாதிப்புற்றோருக்கு சிகிச்சை வழங்கும் முகமாக கிளிநொச்சியில் மத்திய சிகிச்சை நிலையம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

போர் காரணமாக வடகிழக்கில் 700-1000 சிறுவர்கள் வரை உடல்களில் சன்னங்கள், துப்பாக்கி ரவைகளுடன் காணப்படுகின்றனர். இவை இன்றுவரை அவர்களின் உடலில் இருந்து அகற்றப்படாமல் உள்ளது. எனவே இதற்கு விசேட வைத்திய தேவை அவசியமானது என முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கூறியதை அடுத்து கருத்துத் தெரிவித்த பிரதமர் மாற்றுத் திறனாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக நிபுணத்துவம் வாய்ந்த 300 வைத்தியர்கள் தேவைப்படுகின்றார்கள். இதற்குத் தகுந்தவர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி அளித்தும், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இருந்து தமிழ் தெரிந்த மருத்துவர்களை வரவழைத்தும் மத்திய சிகிச்சை நிலையத்தை கிளி நொச்சியில் அமைக்கவுள்ளோம், எனக் கடந்த மார்ச் மாதம் வடமாகாணம் வந்த பிரதமர் நிகழ்வொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இல்ல மெய்வல்லுனர் போட்டியில் மாற்றுத்திறனுடைய மாணவர்களின் அணி நடை

கடந்த 10-02-2015 அன்று யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியில் மாற்றுத்திறனுடைய மாணவர்களின் அணி நடை முதல் முறையாக இடம் பெற்றது. இவ் அணி நடையில் விசேட தேவைக்கு உட்பட்ட 9 மாணவிகள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வு பார்வையாளர்கள் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. இவ் அணி நடையானது கல்வித் துறையில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் சிறப்புற்று விழங்குவதற்கு வலுவிழப்பு தடையாக அமையாது என்பதனை நிரூபணமாக்கியுள்ளது.

1.மருந்தாகும் மாதுளை

பழவகைகளுள் சிறப்புக்குரியதும் பூஜைக்குரியதுமான மாதுளையினை சுதேச வைத்தியர்கள் பலவகையான மருந்துச் சரக்குகள் செய்வதற்கு பயன்படுத்துகின்றனர்.

மாதுளை ஈரான், வடபாகிஸ்தான், வடஇந்தியாவின் இமாலயாப் பிரதேசங்களுக்கு உரியது. ஆனால் இன்று ஈரான், அசெபர்ஜான், இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஈராக், எகிப்து, சீனா, பர்மா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளிலும் தென் கிழக்காசிய தென் எகிப்து, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற பகுதிகளிலும் இம் மரம் காணப்படுகின்றது.

மாதுளையின் இலைகள் ஒடுங்கிய நீள்வட்டமானது. மூன்று தொடக்கம் ஏழு சென்ரி மீற்றர் நீளமும் இரண்டு சென்ரி மீற்றர் அகலமும் உடையவை. 3 cm விட்டமுடைய சிவப்பு நிறப் பழங்களின் பூக்களைக் கொண்டவை. அளவுகள் வெவ்வேறாக இருந்தாலும் சராசரியாக 5-12 cm விட்டமுடையதாக காணப்படும். மாதுளம் விதைகள் (aril) வெள்ளை மற்றும் சிவப்பு நிறமுடையதாகக் காணப்படும். மாதுளம் வரட்சியைத் தாங்கி வளரக் கூடியது.

100g மாதுளம் விதையிலுள்ள சத்துப் பெறுமானங்கள்

சக்தி	- 346 கிலோயூல்
காபோவைதரேற்று	- 18.7 g
வெல்லம்	- 13.7g
நார்	- 4.09 g
கொழுப்பு	- 1.2 g
புரதம்	- 1.7 g
தயமின் (B1)	- 0.077 மி.கிராம்
இறைபோபிளேவின் (B2)	-0.05 மி.கி.
நியாசின (B3)	- 0.29.மி.கி
பன்ரோதீனிக் அமிலம் (B5)	- 0.38 மி.கி.
விற்றமின் (B6)	- 0.08 மி.கி
போலேற்று (Ba)	-38 மைக்ரோ கிராம்
விற்றமின் c	-10 மி.கிராம்
கல்சியம்	- 10 மி.கிராம்ஷ
இரும்பு	- 0.30 மி.கிராம்
மகனீசியம்	- 12 மி.கிராம்
பொசுபரஸ்	- 236 கிராம்
துத்த நாகம்	- 0.35 மி.கிராம்

மூலிகையின் சிறப்பு

கோது, பட்டை - வயிற்றோட்டம், குடல் புழுக்களை

கட்டுப்படுத்தல்

பழச்சாறு - மூளை விருத்தி, கண்ணின் வெண் படலம் (கற்றாக்), இதயம் மற்றும் குரல்வளை ஆகிய உறுப்புக்களுக்கு சிறந்தது.

பூவின் சாறு, கோது, மரப்பட்டைச் சாறு ஆகியன சிறந்த மருத்துவக் குணமுடையன இவ்வாறாக மாதுளை ஒரு மருந்தாகும் கனியாகக் காணப்படுகின்றது.

டைனோசர்கள் பல்வேறு வடிவங்களிலும், பருமன்களிலும் காணப்பட்டன. ஒரு வீட்டுக் கோழியின் அளவு முதல் 30 மீற்றர் நீளமும் 30 தொன் எடையும் உள்ள இராட்சத பருமன் வரை இருந்திருக்கின்றன. மேல் யுராசிக் காலத்தில் வாழ்ந்த Diplodocus போன்றவை தாவர உண்ணிகளாகவும் Tyronno Saurus மாமிச உண்ணிகளாகவும் இருந்துள்ளன. Tyronno Saurus 15 மீற்றருக்கு மேலான நீளம் கொண்ட இவை வலிமையான படுத்த பின்னங்களால்களையும் சிறிய முன்னங்

2.டைனோசர்கள்

225 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட Triassic காலத்தில் பூமித் தகடுகள் அதிரும்ப்படியாக இந்த இராட்சத விலங்குகள் நடந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. 190 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட Jurassic காலத்தில் இவை பூமியில் ஆதிக்கம் செலுத்தி உள்ளன.

கால்களையும் 1.5 நீளமான மண்டை ஓட்டினையும் 30 cm நீளமான கூரிய பற்களையும் கொண்டவை. பின்னங்கால்களில் நின்றால் 7 மீற்றர் உயரம் கொண்ட இவை 15 மீற்றர் வரை நீளமான டைனோசர்களைக் கூட வேட்டையாடக் கூடியவை.

யுராசிக் காலத்தில் கடலில் வாழ்ந்த Zlasmosaurus நீரில் நீந்த துடுப்புக்களை போன்ற அவயவங்

களைக் கொண்டிருந்தன. ஆர்ணிதோ லெஸ்டிங்' என்ற டைனோசர் 2 மீற்றர் நீளமுடையது.

டைனோசர்கள் ஒன்றிலிருந்து ஒன்று தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக வேகமாக ஓடவல் லன. அத்தோடு எதிரிகள் இலகுவில் தாக்காத வாறு கொப்புகள், கவசங்கள் போன்றவற்றை யும் கொண்டிருந்தன.

Triceratops 50 தொன் நிறையும் 10 மீற்றர் நீள மும் கொண்ட இவற்றின் முகத்தில் மூன்று கொம்புகள் காணப்பட்டன.

Stegosaurus முதுகில் பெரிய எலும்புத் தகடுகளை கவசமாக கொண்டிருந்த இவற்றின் தலைகள் சிறியதாகவும் முன்னங்கால்கள் குட்டையான தாகவும் பின்னங்கால்கள் உயரமானதாகவும் இடுப்பு பருத்தும் காணப்பட்டது. இந்த டைனோ சர்கள் கிறிற்றேசியஸ் காலத்தில் அழிந்து போயின்.

டைனோசர்கள் பின்வரும் காரணங்களி னால் அழிந்திருக்கலாம் என கருதப்படு கின்றது.

1.பெரியதொரு ஆகாயக்கல் அல்லது குறுங் கோள் பூமியில் விழுந்திருக்கலாம் அல்லது மோதியிருக்கலாம். அல்லது இவ்வாறானஒரு நிகழ்வால் ஏற்பட்ட தூசுகள் பல km தடிப்பில் பூமியின் வளிமண்டலத்தில் படிந்து சூரியக் கதிர்களை பூமிக்கு வராமல் தடுத்திருக்கலாம். இதனால் டைனோசர்கள் தாங்கமுடியாத அளவிற்கு கடும் குளிர் நிலவியிருக்கலாம்.

2.பூமியின் வெப்பநிலை அதிகரிப்பினால் டைனோ சர்களின் உயிரணு உற்பத்தி குறைந்து இனப் பெருக்கம் செய்ய முடியாமல் போயிருக்கலாம்.

3.பூமியில் அகன்ற இலைத் தாவரங்கள் தோன் றிய போது ஒட்சிசன் அளவு அதிகரித்தது. இத னால் டைனோசர்களின் சமிபாட்டு வேகம் அதி கரித்து உணவு பற்றாக்குறை ஏற்பட்டு இருக் கலாம்.

4.எலி போன்ற சிறிய பிராணிகளின் தோற்றம் டைனோசர்களின் முட்டைகளை உணவாக உட் கொண்டிருக்கலம்.

விஞ்ஞானிகள் மேற்குறிப்பட்ட காரணங்களில் முதலாவது காரணத்தினையும் பூமியின் வெப் பநிலை மாற்றத்தினையும் ஓரளவு ஏற்றுக் கொள்கின்றனர்.

பிற்பட்ட காலத்தில் நிலத்தடியில் புதைந்தி ருந்த பல டைனோசர்களின் எலும்புக் கூடு மாதி ரிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது டைனோசரின் சுவடு இங்கிலாந்தின் ஒக்ஸ்போட் நகரத்தைச் சேர்ந்த FR.டின்பக்லான்ட் என்பவ ரால் கண்டு பிடிக்கப்பட்டது. இவ் எலும்புக் கூடுக் குரிய டைனோசருக்கு மெகலோகாரஸ் எனப் பெயரிட்டனர். Mega என்பது இலத்தின் மொழி யில் பெரியது எனப் பொருள்படும் இரண்டா வது எலும்புக் கூடு ஜிடியோன்மான்ரெல் என்ற அகழ்வாராட்சி நிபுணரால் கண்டு பிடிக்கப் பட்டது. இதற்கு Iguanodon எனப் பெயரிட்டனர். கிரேக்க மொழியில் Iguanodon என்பது பயங்கர மான ஊரும் பிராணி என அழைக்கப்படும். இவற்றுக்கான பெயரிடலில் பெரும் பங்கு வகித் தவர் லண்டன் இயற்கை வரலாறு மற்றும் தொல் பொருட் களஞ்சியத்தின் இயக்குநர் Richard oven ஆவார்.

அமெரிக்காக் கண்டத்திலே ஏராளமான டைனோ சர்களின் அடிச்சுவடுகள் கண்டறியப்பட்டன. Edward Ringer coop மற்றும் Orthneal Mars ஆகிய இருவரும் இணைந்து ஏராளமான டைனோசர் களின் எலும்புக் கூடுகளை அடையாளம் கண் டனர்.

1991 இல் அந்தீஸ் மலைப் பகுதியில் ஆஜன் டினா விஞ்ஞானிகள் குழுவினரால் முழு டைனோ சரின் உடற்சுவடு ஒன்று கண்டெடுக்கப்பட் டுள்ளது. இது யுராசிக் காலத்தில் வாழ்ந்த டைனோசராக இருக்கலாம் எனக் கருதப்படு கின்றது.

அலோகோறஸ் - 35 அடி நீளமானது

கெசிமோ கொறஸ் - 140 அடி நீளமானது

றைனோ கோறஸ் - 45 அடி நீளமானது.

டைனொசர்களை கணினி வரைக்கலை மூலம் திரையில் தோன்ற வைத்த ஸ்டீபன் பேர்க் Jurassic Park, The Lost World என ஹொலிவூட் திரைப் படங்களை உருவாக்கினார்.

3.நயாகரா நீர் வீழ்ச்சி



வட அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள உலகப் புகழ்மிக்க ஒரு பேரருவியே "நயாகரா நீர் வீழ்ச்சி "நயாகரா பேரருவி" ஆகும். இப் பேரருவி சுமார் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பனி உருகி நயாகரா ஆறாக மாறியுள்ளது. அந்த ஆற்றில் இருந்து உருவாகியது தான் நயாகரா நீர்வீழ்ச்சி. இவ் ஆறு 'ஈரி' ஏரியில் தொடங்கி வடக்கு நோக்கிப் பாய்ந்து ஒன்டாரியோ ஏரியில் கலக்கின்றது. நயாகரா எனும் பெயர் இப் பகுதியில் வாழ்ந்த நயாக கரிகா என்ற பழங்குடியினரை அழைக்கப் பயன் பட்டதாக அறியப்படுகின்றது.

கனடாவுக்கும் ஐக்கிய அமெரிக்கவுக்கும் இடையே காணப்படும் இப் பேரருவி சுமார் 56 km நீளமுள்ள நயாகரா ஆற்றின் அருகாமையில் அமைந்துள்ளது. கனடாவில் உள்ள "ஹோஸ்ஷீ" (குதிரை இலாட) அருவியிலும் அமெரிக்காவில் உள்ள அமெரிக்கன் அருவியிலும் இதன் தனியான இரண்டு பெரிய அருவிகள் விழுகின்றன. எப் பக்கம் பார்த்தாலும் அழகுடன் காட்சிதரும் பேரருவியின் இரு பக்கங்களிலும், அருவியின் நீர் வீழ்ச்சியுறும் போது, எற்படும் வேகத்தினாலும் அழுத்தத்தினாலும் மேகமூட்டம் ஏற்பட்டு நீர்த்துளிகள் பன்னீர் தெளிப்பது போல் பார்ப்பவர்களை பரவசப்படுத்துகின்றது.

நயாகரா நீர் வீழ்ச்சியில் ஒவ்வொரு நிமிடமும் ஆறு மில்லியன் கன அடிக்கு அதிகமான நீரானது பாய்ந்து செல்கின்றது. வட அமெரிக்காவில் அதி சக்தி வாய்ந்த இவ் அருவி மின்சாரத்துக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குமான ஒரு இயற்கை வரப்பிரசாதம் ஆகும்.

கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக நியூயோர்க் ஒன்டாரியோ ஆகிய நகரங்கள் புகழ் பெற்ற சுற்றுலாத் தலமாக விளங்குவதற்கு நயாகரா அருவியே காரணமாகின்றது.

4.டெங்குக் காய்ச்சல்

வைரஸ் கிருமியால் ஏற்படுகின்ற இக் காய்ச்சல் ஈடிஸ் (Aedes) எனும் நுளம்பு இனத்தால் பரப்பப்படுகின்றது. இந் நுளம்பில் கறுப்பு வெள்ளை, அடையாளங்கள் காணப்படும். சாதாரணமாக பகலில் 6-8 மணி வரையிலும் மாலையில் 4-7 மணி வரையிலும் மனிதர்களை இந் நுளம்பா



னது கடிக்கின்றது.

டெங்கின் அறிகுறிகள்

1.கடுமையான தலையிடி

2.சடுதியான காய்ச்சல்

3.கண்ணுக்குப் பின்னால் நோ

4.தோலின் கீழ் சிவந்த புள்ளிகள்

4--5 நாட்களில் இவை தணிந்து நோய் குண மாகும். அல்லது அடுத்த நிலையான குருதிப் பெருக்கிற்கு இட்டுச் செல்லும் நிலை ஏற்படின் நோயாளிக்கு

1. மூக்கால் குருதி வெளியேறும்.
2. முரசால் குருதி வெளியேறும்
3. சிறுநீர், மலம் மூலம் குருதி வெளியேறும்
4. மாதவிடாயின் போது அதிகளவு குருதி வெளியேறும்

சிலருக்கு இந்த நிலை தொடர்ந்து குருதிச் சுற்றோட்ட அதிர்ச்சியினால்

1. உடல் குளிர்தல்
2. வாயைச் சுற்றி நீல நிறமாதல்
3. மூச்சுவிடச் சிரமப்படுதல்
4. நாடித்துடிப்பு அதிகரித்தல் என்பன காணப் படும்.

தீவிர மருத்துவ சிகிச்சை அளிக்கா விடின் 12 - 24 மணித்தியாலயத்தில் இறப்பு ஏற்படக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன. எனவே மேற்கூறிய அறிகுறிகள் காணப்படின் உடனடியாக வைத்திய சாலையை நாடுதல் நன்று

நுளம்பு பெருகுவதை தடுப்பதன் மூலமாக இக் காய்ச்சல் பரப்பப்படுவதையும் தடுக்க முடியும்.

1.இவை நீரிலேயே முட்டை இடுவதனால் நீர் தேங்குவதை தடுங்கள். அத்துடன் சிறுகுட்டை கள் கால்வாய்கள் பாத்திரங்கள், ரின்கள், பானைகள், சட்டிகள், பூச்சாடிகள், மரப் பொந்து கள், தாழ்வாரப் பீலிகள் என்பனவற்றில் நீர் தேங்காது பார்த்துக் கொள்ளுங்கள்.

2. பற்றைகள், புல் பூண்டுகளை அழியுங்கள் மேலும் குப்பை கூழங்களை புதையுங்கள் அல்லது எரியுங்கள். அத்துடன் ஆட்களற்ற அயல் வீடுகளில் உள்ள வெற்றுக் காணிகளை துப்புரவு செய்யுங்கள். நுளம்புச் சுருள், நுளம்புவலை என்பவற்றை பாவியுங்கள், வீட்டு யன்னலூடே நுளம்புகள் புகாதவாறு வலை அடியுங்கள், நீளமான உடைகள், காலுறைகள் அணியுங்கள், நுளம்பு அதிகளவு கடிக்கும் நேரங்களில் வெளியில் நிற்பதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

5.நவீன ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற இடங்கள்

Rio2016™

ஆண்டு	நகரம்	நாடு
1. 1986	எதென்ஸ்	கிரேக்கம்

2. 1900 பாரிஸ் பிரான்ஸ்

3. 1904 சென்லூயிஸ் அமெரிக்கா

4. 1908 லண்டன் இங்கிலாந்து

5. 1912 ஸ்ரக்ஹோம் சுவீடன்

6. 1916 பெர்விஸ் மே.ஜேர்மனி

7. 1920 அன்வேப் பெல்ஜியம்

8.1924 பாரிஸ் பிரான்ஸ்

9.1928 ஆம்ஸ்ரர்டாம் ஹொலண்ட்

10.1932 வொஸ்ஏங்சல் அமெரிக்கா

11.1936 பெர்வின் மே.ஜேர்மனி

12.1940 டோக்கியோ ஜப்பான்

13.1944 லண்டன் இங்கிலாந்து

14.1948 இலண்டன் இங்கிலாந்த

15.1952 ஹெல்சிங் பின்லாந்து

16.1956 மெல்போன் அவுஸ்திரேலியா

17.1960 ரோம் இத்தாலி

18.1964 டோக்கியோ ஜப்பான்

19.1968 மெக்சிக்கோ சிற்றி மெக்சிக்கோ

20.1972 மூனிச் மே ஜேர்மனி

21.1976 மொன்றியல் கனடா

22.1980 பொஸ்கோ றைசியா

23.1984 லொஸ் ஏஞ்சல் அமெரிக்கா

24.1988 சியோல் தென் கொரியா

25.1992 பர்சிலோனா ஸ்பெயின்

26.1996 அட்லாண்டா அமெரிக்கா

27.2000 சிட்னி அவுஸ்ரேலியா

28.2004 எதென்ஸ் கிரேக்கம்

29.2008 பீஜிங் சீனா

30.2012 லண்டன் இங்கிலாந்து

31.2016 றியோ டி ஜெனிரோ பிரேசில்

6.மூதுரை (ஔவையர்)

கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்து - தானும் தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி

பொருள்- முறையாக கல்வி கற்காமல் கற்ற வரைப் போல் பாசாங்கு செய்வது தோகை விரித்து ஆடும் மயிலைப் பார்த்து தானும் மயிலாகக் கருதி வான் கோழி தன்னுடைய சிறகை விரித்து ஆடுவது போல் ஆகும்.

7.இலங்கையின் முதற் பெரியார்கள்

1.முதலாவது பிரிததானிய தேசாதிபதி - பிரெட்ரிக்நோத் - 1978

மகா தேசாதிபதி இலங்கையர் - சேர் ஒலிவர் குணதிலக - 1954

2.முதலாவது பிரதம நீதியரசர் - சேட்அட்மண்ட கரிங்டன் - 1802

பிரதம நீதியரசர் இலங்கையர் - சேர் ஆதர் விஜயவர்த்தன - 1949

சுதந்திர இலங்கையில்

01. 1 வது பிரதமர் - டி.எஸ்.சேனநாயக்கா - 1948

02. 1 வது ஜனாதிபதி - வில்லியம் கோபல்லாவ - 1972

03. 1 வது சபாநாயகர் - சேர் ஹென்ரி எமங்க் மேசன்மூர்

04. 1 வது நீதியரசர் - சேர் ஜோன் ஹெவார்ட்

1 வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா

தமிழர்

முதலாவது மகாதேசாதிபதி - சி.நாகலிங்கம்

முதலாவது சபாநாயகர் - சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமி 1936

எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் 1978

பெண்

பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கா - 1960

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி - சந்திரிகா குமாரதுங்க

நீதிபதி - செல்வி சுதர்ம தர்மதாஸ

அரசி - அனுலா

பாராளுமன்ற பொதுச் செயலாளர் - பிரியானி விஜயசேகர

8.உலகச் சிறப்பு பெயர்கள்

சூரியன் உதிக்கும் நாடு - யப்பான்

நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு - நோர்வே

இருண்ட கண்டம் - ஆபிரிக்கா

புனித நாடு - பாலஸ்தீனம்

இடிமின்னல் நாடு - பூட்டான்

புயலடிக்கும் நகரம் - சிக்காக்கோ

அரண்மனை நகரம் - கல்கத்தா

மாடிக்கட்டட நகரம் - நியூயோர்க்

ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் - சுவிஸ் லாந்து

ஐரோப்பாவின் காப்பகம் - பெல்ஜியம்

தங்கப் போர்வை நாடு - அவுஸ்ரேலியா

சக்கரை கிண்ணம் - கியூபா

பொன்வாயில் நகரம் - சன்பிரன்சிஸ்கோ (அமெரிக்கா)

பொற்கோயில் நகரம் - அமிர்தஸ்ழன் (இந்தியா)

பொற்கோபுர நாடு - மியன்மார் (பர்மா)

கனவுக் கோபுர நகரம் - ஒஸ்க்போர்ட் - இங்கிலாந்து

9.நாவலர் வாழ் நாளில்

1822.12.18 திரு.திருமதி கந்தப்பிள்ளை சிவாகாமியார் தம்பதியனரக்கு மகனாக ஆறுமுக நாவலர் பிறந்தார்

1827 வித்தியாபரம்பம் - நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியார் நல்லூர் வேலாயுத முதலியார்

1834 ஆகஸ்ட்

யாழ்.வெஸ்லியன் மிசன் கல்லூரி (யாழ்.மத்திய கல்லூரி) ஆங்கிலம் கற்கச் சென்றார்.

இரு பாலை நெ.சேனாதிராஜ முதலியார். நல்லுஸர் ம.சரவணமுத்துப் புவலர் ஆகியோரிடம் தமிழ் கற்றமை

1842 தந்தை மரணம்

1846 ஜனவரி

சைவ சமயப் பிள்ளைகளுக்கு பாடம் கற்பித்தல்

1847.12.31 வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் வசந்த மண்டபத்தில் சைவப் பிரசங்கத் தொடக்கம்

1848 முதல் இந்தியப் பிரயாணம் வேதாகம (பைபிள்) மொழி பெயர்ப்புடன் ஒப்புவித்து அச்சிட பெர்சிவலுடன் சென்றார்.

1848 ஆகஸ்ட்

வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை ஸ்தாபித்தல்

1849 யூலை

அச்சியந்திரம் கொள்வனவு செய்ய இரண்டாவது தடவையாக இந்தியா சென்றார்.

திருவாவடுதுறை ஆதினம் நாவலர் பட்டம் வழங்கியது. சூடாமணி நிகண்டுரை, சௌந்தர்ய லகரியுரை பதிப்பு

1850 1ம் 2ம் 4ம் பாலர் பாடல்கள் இயற்றப் பட்டது.

1851 - ஏப்ரல்

கொலை மறுத்தல்

1851 ஒக்டோபர்

நன்னூல் விருத்தியுரை

1852 பெரிய புராண வசனம்

1853

வண்ணார் பண்ணையில் சைவப் பிரகாச சபை ஸ்தாபித்தல்

1857 - டிசம்பர்

தாய் மரணம்

1858 யூன்

4 வது இந்தியப் பிரயாணத்தின் போது சென்னையில் அச்சியந்திர சாலை ஸ்தாபித்தல்

1864 ஐப்பசி

சிதம்பரம் சைவ வித்தியாசாலை ஸ்தாபித்தல்

1872

வண்ணை சைவ ஆங்கில வித்தியாசாலை ஸ்தாபித்தல்

1872 - 1873

கோப்பாய் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை ஸ்தாபித்தல்

1879 -மே

இலங்கைச் சட்ட நிரூபனச் சபைத் தேர்தலில் பொன் இராமநாதன் அவர்களை ஆதரித்து பிரசங்கங்கள்

1879 - ஜுலை இறுதிப் பிரசங்கம் - சுந்தர மூர்த்தி நாயனாருக்கு குரு பூசை

1879.12.02

சுகயீனம்

1879.12.05

இறையடி சேர்தல்

PUBLIC LIBRARY
JAFFNA

10.விண்வெளி

புதன்

சூரியனுக்கு அண்மையில் உள்ள கோள்

சிறிய கோள் இது.

சுற்றுப்பாதை சார்ந்த இயல்புகள்

சூரியனுக்கும் புதனுக்கும் இடையேயான சராச ரித்தூரம் 0.387 AU

ஆரை - 57910,000 Km

வட்ட விலகல் - 0.20563069

சுற்றுக்காலம் - 87 நாள் 23.3 மணி

பூமியைச் சார்ந்த சுற்றுக் காலம் 115.88 நாட்கள்

சுற்றுப்பாதை வேகம் சராசரி 47.8725 கி.மீ/ செக்

சாய்வு 7.004 0

மையக் கோட்டு விட்டம் 4879.4 கி.மீ

திணிவு 3.302 x 1023 கி.மீ.

ஈர்ப்பு -2.78 மீ / செக் 2 (மேற்பரப்பு)

சூழற்சிக் காலம் - 58 நா. 15.50886

மேற்பரப்பு வெப்பநிலை சராசரி நாள் 623K, இரவு 103 K

வளிமண்டல இயல்பு

வளியமுக்கம் - trace

பொட்டாசியம் -31.7 %

ஒட்சிசன் (அணு) -9.5% ஒட்சிசன் (மூலக்கூற்று) 5.6 %

ஆர்கன் - 7.0 %

சோடியம் -24.9 %

ஹீலியம் - 5.9 %

நைதரசன் -5.2 %

கபனீரொட்சைட் - 3.4 %

ஐதரசன் - 3.2 %

வெப்பநிலை

நடுகோட்டில் அருகே

பகல் - 427o C

இரவு - 173o C

முனையங்களில் எப்போதும் - 93 o C

ஏனையவை

அச்சு ஏறாத்தாழ 1 /30 பாகை (சாய்பு)

புவியை போன்றே பாறைகளினால் ஆனது இக் கோள். இங்கு அண்ணளவாக 70 % உலோகமும் 30% சிலிக் கேட்டுப் பொருளும் காணப்படுகின் றது.

புதனின் காந்தப்புலம் புவியின் உட் பாதை யைவிட 101010 வலிமையுடையதாக உள்ளது. புறநிலை சூழல் அச்சுடன் நெருக்கமாக ஒருங் கிணைந்துள்ளது.

ஆய்வுதல்

மெஞ்சர் என்னும் அமெரிக்க தானியங்கி விண்கலம் நாசா விண்வெளி நிறுவனத்தினால் 2004 ஒகஸ்ட் 3 இல் ஏவப்பட்டது. 485 kg இதன் எடையாகும். புதன் கோளின் வேதியல் கட்ட மைப்பு. நிலவியல் அமைப்பு காந்தப்புலன் என்பவற்றை அறிவதற்காக இவ் விண்கலம் அனுப்பப்பட்டது. இது 2011 மார்ச் 180 திகதி வெற்றிகரமாக புதனின் சுற்றுப்பாதைகள் சென் றது. தனது முதலாவது படத்தினை 2011 மார்ச் 29 இல் அனுப்பியது. 1975 இல் புதனுக்கு அனுப் பப்பட்ட மரைனர் 10 விண்கலத்துக்கு அடுத்த

படியாக அனுப்பப்பட்ட இரண்டாவது விண்கலம் இதுவாகும். இதுவே புதனின் சுற்றுப்பாதைக் குள்ச் சென்ற முதலாவது விண்கலம் ஆகும்.

மரினா 10 1974 -1975 காலகட்டத்தில் புதனை நெருங்கி 45 % வரை படம் எடுத்தது. மெசஞ்சர் 2008 இல் புதனருகில் பறந்தபோது 30 % படம் எடுத்தது. 2009 புதனை நெருங்கி 2011 மார்ச் 18 இல் புதன் சுற்றுப்பாதைகளுள் புகுத்தப்பட்டு புதன் துணைக் கோளாக மாறியது.

நீர்

புதனில் சூரிய வெளிச்சம் படாத துருவங்க ளில் நீர் பனிக்கட்டியாக உள்ளது.

ஊன்றுகோல்

தொலைபேசியில் இடைவிடாத சிணுங்கல் சிறு எரிச்சலை ஊட்டினாலும் அன்றய பொழுது மிகவும் பிரதானமான நாள் என்பதால் சாருமதி மிகவும் ஆவலோடு அழைப்பை எதிர்கொண்டாள். "ஓம் ஓம் எல்லா வேலைகளும் திருப்தியா இருக்கு, விருந்தினர்கள் வரவேண்டியதுதான் மிச்சம்.... சரி சரி நான் நேரத்திற்கு மண்டபத் திற்கு வருகிறேன். என தனது இனிமையான குரலால் எல்லோரையும் வசப்படுத்தும் அவள் தொடர்பைத் துண்டித்தாள். பம்பரமாய்ச் சுழன்று துரிதமாக ஆயத்தமாக அவள் மனம் ஆவல் கொண்டபோதும் கால்கள் அதற்கு இடமளிக்க வில்லை.

புடவையை சீர்ப்படுத்திக் கொண்டு கண்ணாடி முன் நின்றவளுக்கு "நீ பேரழகிதான் போ" என்று கண்ணாடி விடைகொடுத்தது. "எல்லாம் சரி இனி...." என எண்ணியவளது கண்கள் தாமாகவே வழமையாக ஊன்றுகோல் வைக்கப் பட்டிருக்கும் இடத்திற்குத் தாவின. இன்று ஊன்று கோலுடன் போவதா? விடுவதா? இல்லாமல் சமா ளிப்பேனா....? தவறி விழுவேனா? யாரேனும் சிரிப்பார்களா என அடுத்தடுத்து வினாக்கள் அவள் நெஞ்சில் விம்மி எழுந்தன. "எல்லோருக்கும் தெரியும் தானே நான் விந்தி விந்தி நடப்பது. தெரிந்துகொண்டுதானே இன்றய திருமணப் பதிவும் நடைபெறப்போகிறது. அவர் என்மேல் அனுதாபப்பட்டுத் திருமணம் செய்யவில்லையே. எனது அழகும் கணனித்துறையில் உள்ள அறிவும் தானே... அதற்கு மேலாக எனது குணமும் பிடித் துகொண்டதாலேயே என்னைத் திருமணம் செய்ய விரும்புவதாக அடிக்கடி அன்பழகன் கோரிக்கொள் வார்." என எண்ணியவள் ஊன்றுகோலை எடுத் துக்கொண்டாள். சாருமதி பேருந்து நிலையத்தை அடையவும் பேருந்து புறப்படவும்சரியாக இருந் தது. சாருவைக் கண்ட நடத்துனர் வழிவிட்டுக் கொடுக்கவும் அவள் இலகுவாக ஆசனம் ஒன் றில் அமர்ந்துகொண்டாள். அவ்வாசனத்திற்கு மேலே "மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது" என்ற வாசகம் அவளது கண்களூடாக மனதை வருத்துவதாக இருந்தது. "என்னைவிட இயலாதவர்கள் யாரும் வந்தால் அமரட்டுமே" என் எண்ணி பின்னால் இருந்த இருக்கைக்கு இடம் மாறினாள்.

சிறுகதை

கைகளில் இருந்த ஊன்றுகோலை மெதுவாக வருடிக்கொண்டாள். இது அவளுக்கு இதம் தரும் ஒரு செயற்பாடாகும். அதிகமான இன்பமாக இருக்கட்டும் அல்லது துன்பமாக இருக்கட்டும் அவள் அதைப் பகிர்ந்துகொள்வது அந்த ஊன் றுகோலுடன் தான். அந்த ஊன்றுகோல் அவ ளது நந்தனை மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்திவிடும். பேருந்தின் மெதுவான அசைவு அவளது நினைவுகளை பின்னோக்கி செல்ல வைத்தது. பழைய நினைவுகள் அவளது மன திற்கு சுகம் கலந்த வேதனையைத் தருவன என்ற போதும் அவள் ஒருபோதும் அவற்றிற்குத் தடைபோட்டதில்லை...

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது சாருமதி தாயின் கருவறையில் இருந்து வெளியுல கிற்கு வரத் தயாராகிக்கொண்டிருந்தாள். கலவ ரக் காலப்பகுதியில் பொருத்தமான மருத்துவ வசதியின்மையாலும் முதலில் வெளிவரவேண் டிய தலை திரும்பாமையால் வெளியே வந்த கால்களை இழுத்தெடுத்த வைத்தியரின் கவனக் குறைவால் நரம்புகளில் ஏற்படுத்தப்பட்ட அழுத் தம் சாருவின் ஒருகாலை மிகவும் பாதித்து விட்டது. நடக்க ஆரம்பிக்கும் வரை அவளது ஊனம் எவரது கண்களிலும் புலப்படவில்லை. தத்தித் தத்தி நடக்க ஆரம்பித்த பொழுதே அவ ளது வழமைக்கு மாறான போக்கு தெளிவாகத் தெரிந்தது. அன்றைய மருத்துவத் தேர்ச்சிகளால்

"இது நரம்பு சம்பந்தப்பட்டது மாற்றமுடியாது" எனும் அறிக்கைகளையே வழங்க முடிந்தது.

விபரம் தெரியாத வயதில் சாருமதியால் ஊனத்தை உணர முடியவில்லை. விந்தி விந்தி நடந்து சென்று தனது முன்பள்ளிப் பருவத்தை கடந்து ஆரம்பக் கல்விக்காகப் பாடசாலை சென்ற வேளைதான் அவள் தனது உடற்குறைவை எண்ணத் தலைப்பட்டாள். அவளது நிலை கண்டு பெற்றோரும் ஏன் உறவுகள் கூட வேதனைப் பட்டனர். அழகை அள்ளிக் கொடுத்த ஆண்டவன் கூடவே அறிவையும் கொடுத்து அவலத்தையும் அல்லவா அவளுடன் சேர்த்துவிட்டான். நாளாக நாளாக சாருமதிக்குப் பாடசாலை செல்ல மனம் இடம் தரவில்லை நேரடியாக அவளை யாரும் நோகடிக்காது விட்டாலும். தன் முதுகுக்குப் பின்னால் யாரேனும் ஊனக்கண்ணால் தன்னை நோக்குகின்றார்களோ என்ற தாழ்வுச் சிக்கலில் தவிக்கத் தொடங்கினாள்.

பாடசாலை ஆரம்பமாகும் முன்னரேயே வகுப்பறையினுள் சென்று அமர்ந்துகொள்வாள். இடைவேளையின் போதும் எங்கேயும் செல்லமாட்டாள். பாடசாலை விட்டு ஏறத்தாள எல்லோரும் வெளியேறிய பின்னரே வெளியே வருவாள். பெரும்பான்மையானோருக்கு அவளது ஊனம் தெரியவே தெரியாது. ஒரு பொழுது அவளது பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்து இரண்டு வருடங்கள் கடந்த விளையாட்டு ஆசிரியர் வலைப்பந்து விளையாட்டுப் போட்டிக்காக மாணவிகளை இணைத்துக்கொள்ள அவளது வகுப்பிற்கு வந்தார். "சாருமதி நீர் நல்ல உயரமாக இருக்கிறீர். உம்மையும் போடுறன்" என்றார். அவளோ "வேண்டாம், வேண்டாம் சேர்" என்றாள். அவளது மறுப்பு அங்கே எடுபடவில்லை. "இங்க வாரும் கையொப்பம் போடும்" என்றார். வகுப்பறையில் மயான அமைதி நிலவியது. ஆசிரியரின் சொல்லுக்குக் கட்டுப்படவேண்டும் என்ற எண்ணம் மேலோங்க மெதுவாக எழுந்து ஆசிரியரை நோக்கிச் சென்றாள். அப்போது தான் அவளது நிலைமையை உணர்ந்த ஆசிரியர் "சொறி சாருமதி வெறி சொறி எனக்குத் தெரியாது. இவ்வவு காலம் நான் இங்க வந்து. மன்னிச்சுக் கொள்ளம்மா. பரவாயில்லை நீ கொட் டிக்காரி தானே உன்னை சதுரங்கம், கரம் இரண் டிலையும் போட்டுவிடுறன்." என்று கூறியபடி விரைந்து சென்றுவிட்டார்.

சாருமதி எழுத்துத் துறையில் பாடசாலைக் காலங்களில் பிரகாசித்தாள். அவளது கவிதைகள் சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்து அவளுக்கு உற்சாகம் தந்தன. ஆனால் மேடைகளில் வாசிப்பதற்குத் தயங்கினாள். இந்த நேரத்தில் தான் அவள் அயல் வீட்டில் வசிப்பதற்கு நந்த கோபாலனும் அவனது பெற்றோரும் வந்து சேர்ந்தனர். பிரிந்து போய்க்கிடந்த வேலித் துவாரங்களூடு பார்வைப் பரிமாற்றம். பருவ வயது. சாருமதி தன்னிலை மறந்து நந்தன் மீது காதல் வயப்பட்டாள். அவளது கவிதைகளின் நாயகனாக நந்தன் வலம் வந்தான். "காதலுக்கு கண் இல்லை என்பது இவர்களது காதலில் மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டது.

அன்று உயர்தர இறுதி ஒன்றுகூடலில் தனது கவிதையை தானே வாசித்துவிடவேண்டும் என்ற அவாவும், நந்தன் முன்னிலையில் தனது திறமையை வெளிப்படுத்தும் நோக்கிலும் சாருமதி மெதுவாக எழுந்து விந்தி வந்து ஒலிவாங்கியின் முன் நின்றாள். அவளது வருகைக்கே வானளாவிய கரகோசம். பாடசாலைச் சீருடையில் பவனி வந்த அவள். வெண்பட்டுப் புடவையில், நீண்ட கருங் கூந்தல் அசைந்தாட செப்பு வாய் திறந்து கவி வரி சொல்ல கரகோசம் இடையிடையே வானுயர எழுந்தது. ஆனந்தப் பிரவாகத்தில்த் திளைத்துக்கொண்டிருந்த அவ்வேளை தன் கால்கள் சம நிலை தவற அவள் ஒலிவாங்கியுடன் நிலை குலைந்து வீழ்ந்து விட்டாள்.... ஆனந்த ஆரவாரம் அடங்கியது.

மறு நாள் நந்தன் முதன் முதலாக அவளது வீட்டிற்கு வருகை தந்தான். அவனது கைகளில் ஊன்றுகோல். "இப்ப எப்படியிருக்கு சாரு" என்

றபடி வந்தவனை எழுந்து வரவேற்க முடியமல்க் கட்டிலில்ப் படுத்திருந்தாள் அவள். “விழுந்த நோ தான் தம்பி. நாங்கள் எவ்வளவோ சொல் லிப் பாத்தம் ஊன்றுகோல் ஒன்றை வாங்கி நடந்தால் ஒரு தடுமாற்றமும் இல்லை என்று. பிடிவாதமாக மறுக்கிறாள்" என்று தன் சுமையை இறக்கிவைத்துவிட்டு நகர்ந்தாள் சாருவின் தாய். “இந்தாரும் சாருமதி இந்த ஊன்றுகோலை இனிப் பாவிக்கவேணும். இது என் அன்புக் கட்ட ளையும் அன்புப் பரிசும் கூட” என்று கூறி ஊன்று கோலை அவளிடம் நீட்டினான். அவனது அன்பு கட்டளையை தவிர்க்க முடியாது ஏற்றுக்கொண் டாள்.

ஊன்று கோலை ஊன்றி நடப்பது ஊனத்தைச் சுட்டிக்காட்டுவது போலாகும் என்ற் எண்ண த்தில் அதனை வெறுத்தவள் இப்போது ஊன்று கோல் வடிவில் நந்தனைக் கை பிடித்து நடப் பதாய் உணர்ந்தாள். சலனமின்றி நகர்ந்த அவர் களது வாழ்வில் சுனாமி சதிசெய்ய அடித்து வந்த பேரலை சாருவின் பெற்றோரையும் நந் தன் குடும்பத்தவரையும் விட்டுவைக்கவில்லை. பல்கலைக்கழக விண்ணப்பப் படிவம் பெறுவதற்கு நகர்ப்புறம் சென்ற சாருமதி தெய்வாதீனமாகத் தப்பித்துக்கொண்டாள்.

ஆனால் அவள் ஏன் தப்பினேன்? என்று எண் ணும் வகையில் தொடர்ந்து வந்த துன்பங்கள் அவளை வாட்டி வதைத்தன. என்ன செய்வது ஏது செய்வது என அறியாமல் நிலை குலைந் தாள். இறுதிவரை உடல்களையே காணாத பெற் றோரையும் நந்தனையும் எண்ணாத கணங்களே இல்லை எனலாம்.

காலம் தன் கடமையை செவ்வனே செய்தது. வழுக்கள் மெதுமெதுவாக அழிந்து மறையத் தொடங்கவும் ஐந்து வருடங்கள் ஆகின. தனி யாளாக ஊன்றுகோலுடன் உலாவிய சாருமதி சமூகத்துடன் மெதுவாக ஒத்து இயங்கத் தொடங் கினாள். “மாற்றுத் திறனாளிகள் தொழிற் கல் விக் கூடம்” எனும் பெயரில் இயங்கும் தொழிற் பயிற்சி நிலையத்தில் இணைந்து கணனிக் கல்வியில் தனது திறமையை வளர்த்துக்கொண் டாள். கோபாலன் என்னும் வெளிநாட்டில் வதி யும் தனிநபர் ஒருவரே அந்த நிறுவனத்தை நடாத்திக்கொண்டிருந்தார். கணனிக் கல்வியின் தனித் திறமையால் வங்கி ஒன்றில்ப் பணி புரியும் வாய்ப்பும், அவளது பண்பால் மனம் கவர்ந்த முகாமையாளரின் திருமணக்கோரிக் கையும் நிகழ்ந்த மாத்திரத்தில் சாருமதி புதுப் பிறவி எடுத்துக்கொண்டது போல் உணர்ந்தாள். இன்று அவளது திருமணப் பதிவும் அவள் கல்விகற்ற நிறுவனத் தலைவரை வரவேற்கும் நிகழ்வும் ஒரே மண்டபத்தில் நிகழ இருந்தது. பேருந்து உரிய இடத்தை அடையவும் சாருவின் நினைவோட்டம் நிகழ்காலத்தை அடையவும் சரியாக இருந்தது.

மண்டபம் மகர தோரணங்களால் புதுப் பொலிவு பெற்றுக்கொண்டிருந்தது. நிறுவனத் தலைவருக்கு மலர்ச்செண்டு வழங்கி வரவேற்கும் பொறுப்பு சாருமதிக்கு வழங்கப்பட்டிருந்தது.

நவீன குளிரூட்டப்பட்ட வாகனத்தில் வந்திறங் கிய தலைவரை சக்கர நாற்காலியில் வைத்து அழைத்து வந்தனர். மலர்ச்செண்டை நீட்டிய சாரு மதியின் கண்கள் நந்த கோபாலனின் கண்களு டன் கலந்து பிரிந்தன. “சுனாமியில் அம்பிட்டு முகாமில இருக்கேக்க ஆரோ வெளிநாட்டுக் காரர் இவரைக் கூட்டிப்போனவையாம். மனுஷன் கலியாணம் கட்டாமல் இருந்து ஏலாதவைக்கு இப்படி வேலைவாய்ப்புப் பெற உதவுறாராம். தன்ர நிலமையை நல்லா உணர்ந்த மகராசன் நல்லா வாழவேணும்" என யாரோ சொல்லிக் கொள்வது சாருவின் காதுகளில் விழுந்தது.

திருமதி.மாலா தேவி மதிவதனன்
மங்குனியன் வளவு
அளவெட்டி மத்தி
அளவெட்டி

மாற்று வலுவுடையோர் எதிர்காலம்

மாற்றுவலுவுடையோரில் விழிப்புலனற்றோர் செவிப்புலனற்றோர் பேச்சுத்திறன் அற்றோர் என பல தரப்பினர் காணப்படுவர். மாற்று வலு விழந்தோர் என்ற பொருளை எடுத்து நோக்கு வோமானால் அவர்களுக்கு ஒரு சிறிய குறை காணப்படும். ஆனால் அவர்கள் சமூகத்தில் இருந்து ஒதுக்கப்பட்டவர்கள் அல்ல.

சிலருக்கு மாற்றுவலுவிழந்தோரை எப்படி அணு குவது அவர்களுடன் எப்படி பேசுவது என்ற தெரியாது. அவர்களுடன் பேசாது அவர்களை ஒதுக்கி வைக்கிறார்கள். அவர்களை ஏதோ விநோதமானவர்களைப் போல பார்ப்பார்கள். அவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்குகிறார் கள். அவர்களுக்குரிய உரிமைகளை வழங்க மறுக்கின்றார்கள். சில பெற்றோர் அவர்களால் எதுவும் செய்ய முடியாது என்று எண்ணி வீடு களில் முடக்கி விடுகிறார்கள். அவர்களுக்குரிய கல்வியினையோ தொழில் முயற்சியினையோ ஏற்படுத்திக் கொடுக்க முன்வருவதில்லை.

முதலில் விழிப்புலனற்றோரை எடுத்துக் கொண் டால் அவர்களுக்கு ஒரு பொருளை பார்க்க தான் முடியாது. அவர்களால் பொருளை தொட்டு உணர முடியும். அவர்களுக்குள் எத்தனையோ திறமைகள் காணப்படும். அதுமட்டுமன்றி அவர்களுக்கு ஞாப கசக்தி அதிகம். மற்றவர்களைப் போல திறமை களும் உண்டு. இன்று எத்தனையோ துறைகளில் முன்னேறி எம் மக்களுக்கும் இந்த நாட்டிற்கும் பெருமை தேடி தந்துள்ளனர்.

இலங்கையில் விழிப்புலனற்றோர் திறமைகளை எடுத்து நோக்குவோமேயானால் அவர்களில் பலர் கலைமாணி, முதுமாணி போன்ற பட்டதா ரிகளாகவும் ஆசிரியர்களாகவும் பெருமை தேடித் தந்துள்ளனர். அது மட்டுமன்றி இசைக் கலை ஞர்களாகவும் விளங்குகின்றார்கள். தமிழ் பேசும் முதலாவது சட்டத்தரணி எனும் பெருமையினை ஒருவர் தனதாக்கி கொண்டுள்ளார். இப்படி எத்தைனையோ மாணவர்கள் இசைத்துறை, கலைத்துறையில் சாதனைகளை நிலைநாட்டி தங்கப்பதக்கங்களை பெற்றுள்ளர்கள். விழிப்பு லனற்ற எத்தனையோ பேர் கதிரை பின்னுகி றார்கள். விளக்குமாறு செய்கிறார்கள். தமது தேவைகளை பூர்த்தி செய்ய தமக்கு தெரிந்த சுயதொழில்களில் ஈடுபட்டு அதில் வரும் வரு

மானங்களை கொண்டு எனையோர் போல் சொந்தக் காலிலே நிற்கிறார்கள். செவிப்புலனற்றோர். பேச்சுத்திறன் அற்றவர்கள் எத்தனையோ உயர் பதவிகள் வகித்து வருகிறார்கள். சொந்த தொழில் முயற்சியில் ஈடுபட்டும் வருகிறார்கள்.

இவர்களும் மனிதர்களே. எம் போன்றவர்களே. எம் போன்ற உணர்வுகளே அவர்களுக்குள்ளும் காணப்படும். அவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கி விடாதீர்கள். அவர்களுக்கும் எம் போல் சகல உரிமைகளையும் வழங்குங்கள். அவர்களையும் மதியுங்கள்.

பெற்றோர்களே! நீங்கள் உங்கள் பிள்ளைகளை ஊனமுற்றவர்கள் எனக் கருதி வீடுகளில் முடக்கி விடாதீர்கள். அவர்கள் ஊனமானலர்கள் இல்லை. சிறிய குறைபாடுடைய விசேட தேவையுடையவர்கள். அவர்களின் மனதில் ஊனம் இல்லை. சாதிக்க துடிப்போர். அவர்களின் எதிர்காலங்களை வீணடிக்காதீர். எனது பிள்ளை ஊனம் அவனால் எதுவும் முடியாது. ஏனையோர் அவரைப் பார்த்து கேலி செய்கிறார்கள் என எண்ணி பிள்ளைகளை வீட்டிலே முடக்கி உங்கள் பிள்ளைகளின் வாழ்வை சீரழித்து விடாதீர்கள். அவர்களை அவர்களுக்கு ஏற்ற பாடசாலைக்கு அனுப்புங்கள் யாழ். மண்ணிலே விசேட தேவையுள்ளவர்களுக்ககாக வாழ்வகம் (சுன்னாகம்) சிவபூமி (கோண்டாவில்), ஆர்க் (உடுவில்) மற்றும் கைதடி நவீலிட் பாடசாலை, கைதடி தொழில் பூங்கா போன்றன இயங்கி வருகின்றன.

அவர்களுடன் உங்கள் பிள்ளைகளை இணையுங்கள். அங்கு அவர்களுக்கு கல்வி வசதி செய்து கொடுக்கப்படுகின்றது. அவர்களுக்கான மேலதிக கற்றல் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. அவர்கள் திறமைகளை வெளிக் காட்ட கண்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஏனைய மாணவர்களுடன் உங்கள் பிள்ளைகளையும் இணையுங்கள். இதுவரை காலமும் வீணாகிவிட்டால் இனிவரம் காலத்தை ஒளிமயமாக்குங்கள். அவர்களுக்கும் சமுதாயத்தில் மரியாதை செய்யுங்கள். சரியான உரிமைகளை வழங்குங்கள். அவர்களுக்குரிய உரிமைகளை பாதுகாருங்கள்.

நாம் அனைவரும் விசேட தேவைக்குரியோருக்கு தேவையான உதவிகள வழங்க முன்வரவேண்டும் அவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளுக்கு எம்மால் முடிந்த உதவிகளை வழங்க வேண்டும். அவர்களின் திறமைகளை இனம்கண்டு அதில் அவர்கள் முன்னேற உதவவேண்டும். விசேட தேவையுடையோர் அனைவரும் இவ்வையகத்தில் தலை நிமிர்ந்து ஏனையோர் போல்நல்ல வண்ணம் வாழ அவர்களுக்கு எம்மால் முடிந்த உதவிகளை வழங்கி அவர்களையும் இச்சமுகத்தில் உயர்த்திடுவோம்.

சுபா , மானிப்பாய்

* தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவை மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.
* உறுதியுடன் இரு, அதற்கு மேலாகத் தூய்மையானவனாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு.
* பலமே வாழ்வு, பலவீனமே மரணம்.
* தன்னை அடக்கப் பழகிக்கொண்டவன் வேறு எதற்கும் சிக்கமாட்டான். அத்தகைய தகுதி உள்ளவனே உலகில் நன்றாக வாழத் தகுதியுள்ளவன்.

முற்றத்து மல்லிகை

அன்று திங்கட்கிழமை நானும் எனது நண்பரும் தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் சென்றோம். அங்கே ஒரு முதியவர் கற்பூரம் விற்றுக்கொண்டிருந்தார். அவரது இரு கண்களிலும் ஒளி இல்லை. ஆனால் அவரது முகத்தில் ஒரு பேரொளி தெரிந்தது. நான் அவருடன் சிறிது உரையாடினேன். அவ் உரையாடலினையே இவ் இதழின் முற்றத்து மல்லிகை பகுதியில் பதிவு செய்கின்றேன்.

வணக்கம் ஐயா

வணக்கம் தம்பி

1.உங்களைப் பற்றி கொஞ்சம் கூறுங்களேன்.

எனது பெயர் கந்தசாமி, தந்தையார் வேலுப்பிள்ளை, தாயார் சின்னம்மா வேலணையில் உள்ள சரவணை (9 ஆம் வட்டாரம்) எனும் இடத்தில் 1940ஆம் ஆண்டு நான் பிறந்தேன். எனக்கு பத்து சகோதரர்கள் ஆனால் இப்பொழுது ஒருவர் தான் இருக்கிறார். நான் தற்போது தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் உள்ள மடம் ஒன்றில் வசித்து வருகின்றேன்.

2.நீங்கள் எவ்வாறு கண்பார்வையினை இழந்தீர்கள்?

எனக்கு 14 வயதாக இருக்கும் போது அதாவது 1954 ஆம் ஆண்டு அம்மை நோய் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து எனது கண்பார்வை அற்றுப் போய் விட்டது.

3.நீங்கள் தொண்டமானாற்றிற்கு எவ்வாறு வந்தீர்கள். எப்பொழுது வந்தீர்கள் எனக் கூறமுடியுமா?

ஆம்! நான் சிறுவனாக இருக்கும் போதே எனது தந்தையார் இறந்து விட்டார். சிறு வயதிலே நானும் எனது கண்பார்வையினை இழந்த விட்டேன். நான் கடைசிப் பிள்ளை என்பதால் செல்லப்பிள்ளை. ஆனாலும் இவ் இழப்புக்கள் என்னை மிகுந்த வேதனைக்கு உட்படுத்தின. அத்துடன் வறுமையும் என்னை வாட்டியது. இதனால் நானும் எனது தாயாரும் தொண்டைமானாறு சந்நிதி ஆலயத்துக்குவந்தோம். அன்று முதல் இங்கு கற்பூரம் விற்று வருகின்றேன். மனம் சஞ்சலப்படும்போது ஆலயத்தில் போய் அமர்வேன். மனம் ஆறுதல் பெறும். எனவே முருகனது அருளால் நான் மன ஆறுதலுடன் வாழ்கின்றேன்.

4.உங்களால் இத் தொழிலை எவ்வாறு சிறப்பாக செய்ய முடிகின்றது.

நான் காசுகளை ஒவ்வொரு போத்தல்களில் 10 ரூபா, 20 ரூபா, 50 ரூபா, 1,2,5 ரூபா என போட்டு அடையாளம் இட்டு வைப்பேன். அதன் படி மாற்றி மிகுதிப் பணம் கொடுப்பேன். ஆலய சூழலில் தொழில் புரிகின்ற காரணத்தினால் நேர்மை



யான மனிதர்களே என்னிடம் வருவார்கள். நம்பிக்கை தான் எனது வாழ்க்கை. என்னை ஏமாற்றுபவர்களை நான் காணாவிட்டாலும் அந்த முருகன் காண்பார் தானே.

5.நீங்கள் பார்வையற்ற பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்காக உதவி புரிந்ததாக எனது நண்பர் கூறினார். இது பற்றி சற்று விரிவாக கூறுங்களேன்.

நான் பாடசாலை சென்று பெரிதாகப் படிக்க வில்லை. அக்காலத்தில் பார்வையற்றவர்கள் கற்பதற்கான வசதி வாய்ப்புகளும் பெரிதாக இருந்ததில்லை. கல்வி கற்காமையினால் இன்று நான் படும் கஷ்டங்களை போல் இனி வரும் காலங்களில் பார்வையற்றவர்கள் கஷ்டப்படக் கூடாது எனபதற்காக “கந்தசாமி கல்வி நிதியம்” என்ற பெயரில் நிதியம் ஒன்றினை பார்வையற்ற வர்களுக்காக பணியாற்றும் யாழ்.விழிப்புல னற்றோர் சங்கத்தில் உருவாக் கியுள்ளேன். இந் நிதியத்தில் எனக்கு கிடைகின்ற வருமானத்தின் பெரும் பகுதியினை வைப்புச் செய்கின்றேன். மேலும் எனது பெயரில் உள்ள வங்கிக் கணக் குகளும் நான் இல்லாத காலத்தில் இந்நிதி யத்திற்கு சேரத்தக்க வகையில் ஏற்பாடுகளும் செய்துள்ளேன்.

இந் நிதியத்தின் ஊடாக பார்வையற்ற பிள் ளைகளின் கல்வி செயற்பாடுகளுக்காக உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

6.இந்த நிதியத்தின் ஊடாக தாங்கள் எதிர் பார்க்கும் விடயம் என்ன?

பார்வையற்றவர்களுக்கு கல்வி மிக அவசிய மானது. எனவே என்னால் கஷ்டப்பட்டு சேகரிக் கப்படுகின்ற நிதியினை உரிய முறையில் பயன் படுத்தி பார்வையற்ற பிள்ளைகள் தங்கள் கல் வியில் முன்னேற்றம் அடைந்து நாளை உயர்ந்த பதவிகளில் இருந்து சேவையாற்றி மகிழ்வுடன் வாழ வேண்டும். இதுவே எனது எதிர்பார்ப்பும் விருப்பமும் ஆகும்.

7.உங்களுக்கு இவ்வாறான ஒரு எண்ணம் வரக் காரணம் என்ன?

நான் இளைஞனாக இருந்த போது பல பார்வை யற்ற பிள்ளைகள் கல்வி கற்க முடியாத நிலை யில் இருந்தமையினை உணர்ந்தேன். மேலும் நான் கல்விகற்க முடியாது போனமை இவைகளே என்மனதில் பார்வையற்ற பிள்ளைகளின் கல் விக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தை உரு வாக்கியது.

8.நீங்கள் பார்வையற்றோருக்கும் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கும் கூற விரும்பும் செய்தி என்ன?

இன்று நீங்கள் கற்கும் கல்வி நாளை உங்கள் கஷ்டங்களை நீக்கும். கடவுளை நம்புங்கள். அவர் உங்களை கைவிட மாட்டார். ஆலயங்களுக்கு செல்லுங்கள் மனம் ஆனந்தம் அடையும். இதுவே நான் இவர்களுக்கு கூற விரும்பும் செய்தி.

9.பொது மக்களுக்கு தாங்கள் கூற விரும்பு வது என்ன?

மாற்றுத் திறனாளிகளுக்கு மதிப்பளியுங்கள். அவர்களையும் உங்களுள் ஒருவராகப் பாருங்கள்.

10.உங்கள் நன்றிக்கு உரியவர்களாக யாரை யேனும் இவ் இடத்தில் குறிப்பிட விரும்புகின் றீர்களா?

ஆம் சன்நிதியில் என்னை அன்புடன் ஆதரித்து தங்குமிட வசதி தந்த திரு. விசாகரெத்தின ஐயர் தெய்வேந்திர ஐயர் அவர்களை என்னால் மறக்க முடியாது. இவர் சந்நிதி வீதியில் நான் தங்குவற்காக மண்டபம் ஒன்றினை இலவச மாக வழங்கியுள்ளார். இதில் சுமார் 55 வருடங் களாக நான் வசிக்கின்றேன். இன்றும் இவ் மண் டபத்தில் தான் வசிக்கின்றேன். எனவே இவ் உதவியை வழங்கிய திரு. விசாகரெத்தின ஐயர் தெய்வேந்திர ஐயர் அவர்களுக்கு என்றென்றும் நான் நன்றிக்குரியவனாய் உள்ளேன்.

நன்றி கந்தசாமி ஐயா

நன்றி

முற்றத்து மல்லிகை பகுதிக்காய் உங்களை சந்தித்ததில் மகிழ்வும் மன நிறைவும் அடை கின்றேன்.

இவருடனான உரையாடலினை நிறைவு செய்து எழுந்தேன். ஆலயத்தில் பூஜை மணிகளும் மேள தாளங்களும் ஒலித்தன. பூசகர் கற்பூர தீபம் காட்டினார். அடியவர்கள் அந்த ஒளியில் முருகனை தரிசித்தனர். அந்த ஒளியானது பார்வையற்ற பிள்ளைகளின் கல்வி ஒளியாய் எனக்கு காட்சி அளித்தது.

நன்றி

முற்றத்து மல்லிகைப் பகுதிக்காகப்

நா. கீதாகிருஷ்ணன்.

வலுவிடம் கேளுங்கள்

மிருசுவில் குமார்

வலு இழந்தவர்களிடம் மிகையான ஆற்றல்கள் இருப்பதாக நான் கருதுகின்றேன். இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பொதுவாக மனிதர்களிடத்தில் ஆற்றல்களும், திறன்களும் இருக்கும். அத்தகைய ஆற்றல்களில் நிபுணத்துவம் பெறுகின்ற பொழுதே அல்லது சிறப்புத் தேர்ச்சி பெறுகின்ற போதே அது விசேட கவனயீர்ப்பை பெறுகின்ற அம்சமாக மாறுகின்றது. வலு இழந்த நபர்கள் இடத்திலும் அவர்களுக்கு உரித்தான வகையிலான ஆற்றல்கள் இருக்கும். அவற்றை அவர்கள் வளர்த்துக் கொள்கின்ற பொழுதுதான் அல்லது அவற்றில் அவர்கள் சிறப்புத் தேர்ச்சி பெறுகின்ற பொழுதுதான் மிகை யான ஓர் வெளிப்பாடு போல் அத்திறன் வெளித்தோன்றும். அதனை வைத்துக்கொண்டு வலு இழப் புடன் கூடிய நபர்களிடம் மிகையான ஆற்றல் கொட்டிக் கிடக்கிறது என்று கூறி விடமுடியாது.

எழுதுங்கள் வெல்லுங்கள்

போட்டி இல.06 வினாக்கள்

01. இலங்கையின் தற்போதைய பிரதமரின் பெயர் என்ன?

02. இலங்கையின் தேசியக்கொடி எத்தனையாம் ஆண்டு இலங்கை ஜனநாயகக் குடியரசினால் அங்கீகரிக்கப்பட்டது?

03. உலகில் வங்கி முறையினை முதன்முதலில் அறிமுகப்படுத்திய நாடு எது?

04. 2015 ம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது?

05. உலக வாணிப நிறுவனத்தின் (WTO) தலைமையகம் எங்கே அமைந்துள்ளது?

06. எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்ட அருணிமா சின்ஹா எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

07. பிரான்ஸ் தேசத்தில் விழிப்புனர்வற்றோருக்கான முதலாவது பாடசாலையை ஆரம்பித்தவர் யார்?

08. லூயி பிரெயிலின் பெற்றோர் யார்?

09. கிறிஸ்டி பிரவுண் (Christy Brown) என்பவர் எப்போது எங்கே பிறந்தார்?

10.இலங்கையில் எத்தனையாம் ஆண்டு அங்கவீனர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது?

இவ் வினாக்களுக்குரிய சரியான விடைகளை கீழ் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதி அனுப்புங்கள். இப் படிவத்தில் எழுதி அனுப்பி வைக்கப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

விடைகளை *30.09.2015* க்கு முன்னர் எமக்கு கிடைக்ககூடியவாறு அனுப்பிவையுங்கள். சரியான விடைகளை எழுதும் வெற்றியாளர்களுக்கு முதல் மூன்று பரிசில்களும் **10** ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

முடிவுத் திகதி *30.09.2015*

விடைகள்

போட்டி இல. 06

எழுதுங்கள் வெல்லுங்கள்

01...

02...

03...

04...

05...

06...

07...

08...

09...

10...

1. முழுப் பெயர்: ....

2. தபால் முகவரி: ....

3.தொலைபேசி இலக்கம் ....

4. பிறந்த ஆண்டு, மாதம், திகதி ....

போட்டி இல.5 விடைகள்

*01. J.R.*ஜெவர்த்தனா
02. மயில்
03. மங்கல்யான்
04. துரோசியா, கிளிச்சாடி செடி, கெண்டித் தாவரம், யூற்றிகுளோறியா
05. பாரிஸ்
06. ஒக்டோபர் *10*
07. புலன்சார் நரம்புக் கேட்டல் இழப்பு
08. 1960
09. 1969 ஒக்டோபர் மாதம் *4* ஆம் திகதி கொழும்பில்
*10.*கிறிஸ்டி பிரவுண்

அனுப்ப வேண்டிய முகவரி :
எழுதுங்கள் வெல்லுங்கள்
கருவி
மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்
இல.1166/15 அருளம்பலம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

எண்ணக் கிண்ணம்

கவிப்பேரரசு
வைரமுத்து

நயாகரா

இது என்னடா இது
அந்த பாறை முகடுகளில்
தண்ணீரைத் துவைத்துக்
காயப்போட்டது யார்

இது எழுந்து நிற்கும் நதியா?
தண்ணீரின் விஸ்வரூபமா?
நக்கீரா இதை
நீர் வீழ்ச்சி என்பது பொருட்குற்றமல்லவா !
நீருக்கு இது வீழ்ச்சியல்ல எழுச்சி !

உன் பழமொழி பொய்யடா தமிழா !
இதோ இங்கே நெருப்பில்லாமல் புகைகிறதே
இங்கென்ன தண்ணீர் முத்துக் குளிக்கிறதா?
இது என்ன வானுக்கும் பூமிக்கும் வைர
நெசவா?
அது என்ன
தற்கொலை புரியும் தண்ணீருக்கு
அத்தனை ஆனந்தமா?

கண்டேன் கண்களுக்குள் மழை
கேட்டேன் காதுக்குள் கச்சேரி!
தொட்டேன் ஜீவனுக்குள் சில்லிப்பு!
உண்டேன் பல்லிடுக்கில் பனிக்கட்டி!
முகர்ந்தேன் இனந்தெரியா ஈரமணம்!

ஓகோ! கண்டு கேட்டு
உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
அருவியின் கண்ணுமுள
தொழில் மறந்தன என் புலன்கள்
என் கண்கள் அருவி குடிக்கும்
என் செவிகள் சப்தத்தில் எதையோ
தரிசிக்கும்
மனமெனும் புல்வெளியில் ஆச்சரியம்
பூச்சொரியும்

அந்த படிக கண்ணாடியை
ஒருகோடிச் சிதறல்களாய் உடைத்தது யார்?
இறந்துபோன கம்பா எழுந்து வா
இதோ பார் தண்ணீரின் யுத்தகாண்டம்
விழுவதில் அழகு மழையில் மட்டும்தான்
அழிவதில் அழகு அலையில் மட்டும் தான்
அழுவதில் அழகு அருவியில் மட்டும்தான்
இந்த அனுபவ சுகங்களை
அள்ளிவைத்துக்கொள்ள
இருதய கூட்டுக்குள் இடமில்லையே சாமி

நடந்துவரும் போது நதி சுரம் பழகிவருகிறது
அருவியில் வந்துதான் அரங்கேறுகிறது
வானவில்லை திரையிடவே இந்த
விண்ணீர்த் திரை விரிக்கப்பட்டதா?
நீர்க்குடும்பத்திற்கு இங்கு மட்டும்
ஒவ்வொரு நாளும் ஓணம் பண்டிகையா?
அருவியே அருவியே! அடர்ந்த அருவியே!
உன்னை எழுதும்போது
கூறியது கூறலும் குற்றமென்றாகாது!

தாஜ்மகால் பாராத இந்தியனும் உண்டு!
நயாகரா பாராத அமெரிக்கனும் உண்டு!
என்ன செய்வது?
இந்த எந்திர வாழ்க்கையில்
சுவாசிக்காமல் கூட உயிர்வாழ முடிகிறது.
இந்த அருவியில் குளித்தால்
வாழ்க்கை வணக்கத்துக்குரியது!
இந்த அருவியில் இறந்தால்
மரணம் கூட மரியாதைக்குரியது.

வாங்க கதைக்கலாம் (சைகை மொழி)

கருவியின் தடங்கள்



சிந்தையில் ஆயிரம் விந்தைகள் சேரும்
சித்திரமாகவே சாதனை நீளும்
சரிநிகர் ஆகவே வாழ்வது கூடும்
சிறப்புறு செய்திகள் செவிதனில் சேரும்
நல்லன யாவுமே மெல்லென மேவும்
நித்தியமாகவே நிலைத்தது வாழும்
நம்பிய யாவுமே நமதுறவாகும்
நானில மீதினில் நம்புகழ் வீசும்

இறுவெட்டுப் பதிப்பு
ஸப்தமி கலையகம்
நாச்சிமார் கோயிலடி
யாழ்ப்பாணம்
0750394989

தேவி Printers,
140/1, Manipay Road, Jaffna.
021 300 3030